**SPECIFICATION FOR THE PROPOSAL FOR DIVERSION OF 0.25 HA OF FOREST LAND FOR WIDENING FROM INTERMEDIATE LANE TO TWO LANE AND STRENGTHENING OF SATHANUR DAM ROAD AT KM. 3/4 TO 5/0 IN THIRUVANNAMALAI DISTRICT.**

As per the G.O.Ms.No.2357 Food and Agriculture department dt:30.06.1965 an area of 1066 Acres of Forest land has been diverted to Public Works Department for the construction Sathanur Dam. In 1066 acres, an area of 6.60 acre is utilised for the formation of approach road from Sathanur to Dam. The road has been formed on 1965 during the construction of Sathanur Dam for a length of 5.00 KM and width of 5.50 Meters.

As per the G.O.Ms.No.151 Highways Department dt:02.06.2008, the road (5 Km) has been handed over to Highways Department and the road is now maintained by High Ways Department from 02.06.2008.

The road is generally used by public, officials and staff of Forest Department and Public Works Department and public who visits the Sathanur Dam. Hence it is essential to widening of this road from Intermediate lane to two land and Strengthening of Sathanur Dam road.

Divisional Engineer, H (C&M),
Tiruvannamalai Division.

-9 JUN 2008
நெடுஞ்சாலை திருவண்ணாமலை

சுருக்கம்

நெடுஞ்சாலைத் துறை - திருவண்ணாமலை கோட்டத்தில் சாத்தனூர் அணைச் சாலையில் பொதுப்பணித் துறைக்கு சொந்தமான 5.00 கி.மீ நீளமுள்ள சாலையை முக்கிய மாவட்டச் சாலை இனத்தின் கீழ் பராமரிப்புக்காக நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றம் செய்ய அனுமதி வழங்கி ஆணை வெளியிடல்

---

நெடுஞ்சாலைத் (எச்.கியூ.2) துறை

அரசாணை (நிலை) எண் 151 நாள் 02.06.2008

படிக்கப்பட்டது

(1) தலைமைப் பொறியாளர் (பொதுப் பணித் துறை) நீர்வள ஆதார அமைப்பு, சென்னை மண்டலம் கடித எண் தொ 5 (4)/825/2007, நாள் 21.03.2007

(2) தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை கடித எண் 2704/சாலை3/07 நாள் 09.07.2007, 27.09.2007 மற்றும் 30.11.2007

----

ஆணை.

திருவண்ணாமலை (நெ) கோட்டம், செங்கம் வட்டத்திலுள்ள சாத்தனூர் கிராமத்திலிருந்து சாத்தனூர் அணைக்கு வரும் (கிமீ 0/0–5/0) 5.00 கிமீ. நீளமுள்ள சாத்தனூர் அணைச் சாலையானது பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் உள்ள சாலையாகும். சாத்தனூர் அணைக்கு வரும் சுற்றுலா பயணிகளால் போக்குவரத்து அதிகமாகக் காணப்படுவதாலும், இச்சாலையினை பராமரிக்கத் தேவையான தகுதியான பணியாளர்கள் மற்றும் இயந்திர தளவாடங்கள் இல்லாததாலும், இச்சாலையினை சரியாக பராமரிக்க இயலவில்லை என்றும், எனவே, நெடுஞ்சாலைத் துறை மூலம் இச்சாலையினை பராமரிக்கும் நிலையில் சாத்தனூர் அணைக்கு வரும் பயணிகள் எண்ணிக்கை அதிகரித்து சுற்றுலா மூலம் அரசுக்கு வருவாய் அதிகரிக்க வாய்ப்பிருப்பதாக தலைமைப் பொறியாளர் (பொ.ப.து.) நீர்வள ஆதார அமைப்பு அவர்கள் தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட சாலை திருவண்ணாமலை மாவட்டத்தில் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், கிராமங்களை இணைப்பதாகவும் மற்றும் பேருந்து போக்குவரத்து உள்ளதாலும் இச்சாலையை நெடுஞ்சாலை நிதி ஒதுக்கீட்டில் பராமரிப்பு மற்றும் மேம்பாடு செய்ய இயலும் என்றும், சுற்றுலா முக்கியத்துவம் கருதியும், பொதுப்பணித் துறையால் பராமரிக்க முடியாத நிலை இருப்பதைக் கருத்தில் கொண்டும் இதனை சிறப்பு நேர்வாக கருதி, பொதுப்பணித் துறைக்கு சொந்தமான 5.00 கிமீ நீளமுள்ள சாத்தனூர் அணைச் சாலையை நெடுஞ்சாலைத் துறைக்கு மாற்றி, மாவட்ட முக்கிய சாலை இனத்தின் கீழ் பராமரிப்பதற்கான அரசாணையை வழங்கும்படி தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அரசை கோரியுள்ளார்.

3. தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை அவர்களின் கருத்துரு அரசினால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. சுற்றுலா முக்கியத்துவம் கருதியும், பொதுப் பணித் துறையால் பராமரிக்க முடியாத நிலை இருப்பதை கருத்தில் கொண்டும் சாத்தனூர் அணைக்குச்

செல்லும் (0/0–5/0) 5.00 கிமீ நீளமுள்ள சாலையை நெடுஞ்சாலைத் துறை மூலம் மாவட்ட
சாலையாக வகைப்படுத்தி பராமரிக்கவும், இச்சாலை பராமரிப்பிற்கு தேவைப்படும் தொகை
மாவட்ட முக்கிய சாலைகள் பராமரிப்பிற்கு அரசு ஒதுக்கீடு செய்யும் நிதி ஒதுக்கீட்டி
மேற்கொள்ளவும் அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வாணை நிதித் துறையின் இசைவுடன் அதன் அசாகுறிப்பு எண் 732/நிதி (பொ.ப.
25.02.2008–ன்படி வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா. அல
அரசு செய

பெறுநர்
தலைமைப் பொறியாளர் (பொது), நெடுஞ்சாலைத் துறை, சென்னை.5.
தலைமைப் பொறியாளர் (பொ.ப.து) நீர்வள ஆதார அமைப்பு, சென்னை மண்டலம், சென்னை
மாவட்ட ஆட்சியர், திருவண்ணாமலை.
கண்காணிப்புப் பொறியாளர் (நெ), சென்னை
கோட்டப் பொறியாளர் (நெ), திருவண்ணாமலை
நகல்
செயலர், சுற்றுலாத்துறை, சென்னை.9
செயலர், பொதுப் பணித்துறை, சென்னை.9
நிதித் துறை, சென்னை.9.

/உத்தரவுப்படி/ அனுப்பப்படுகிறது/

பிரிவு அலு

Divisional Engineer (Highways)
(C & M), Tiruvannamalai - 606 601.